1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்தாலும் தங்களுடைய வேண்டுகோளை மற்றவர்களும் ஏற்றுச் செயல்படும் அளவிற்கு நீங்கள் ஒரு முயற்சி செய்து பார்க்கலாம். ஏற்கனவே அப்படி ஒரு தடவை முயற்சி செய்து நீங்கள் வெற்றியோடு திரும்பி வந்தது நினைவு இருக்கும் என்று நம்புகிறேன்.

(உ) ஒரு கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் அவைக்கு வந்து சுதந்திரமாகச் செயல்பட முடியாது அடைத்து வைக்கப் பட்டிருப்ப தாக ஓர் உறுப்பினர் தெரிவித்துள்ளது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, நான் ஒரு முக்கியமான பிரச்சினையைப் பற்றி இங்கே எழுப்ப விரும்பு கிறேன். அதுவும் ஒரு பெரிய குற்றச்சாட்டாக இங்கே வந்து இருக்கிறது. எனவே அதை இந்த அவையினுடைய கவனத் திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். இந்த அவையைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் எங்கோ மறைத்து வைக்கப்பட்டு இருக்கிறார்கள், அவர்களுடைய சுதந்திரம் கட்டுப்படுத்தப் பட்டு இருக்கிறது என்று, ஒரு குற்றச்சாட்டு இந்த அவையிலே எழுப்பப்பட்டு இருக்கிறது. அவை நடந்து கொண்டிருக்கும் போது உறுப்பினர்கள் சில பேர்கள் அவைக்கு வராமல் தடுக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது ஜனநாயகத்திற்கு விடப்பட்டு இருக்கிற சவால் மட்டுமல்ல. அதிலே தாங்கள் கவனம் செலுத்த வேண்டிய மிகப் பெரிய கடப்பாடு இருக்கிறது. சாதாரணமாக, சாதாரண நிலையில் கூட பொதுச் சட்டத்திலே சில மெம்பர்கள் கைது செய்யப்பட்டா லும், உடனடியாக அந்தத் துறையினர் சபாநாயகருக்கு, இன் னின்னார்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள், இங்கே வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவிப்பது ஒரு மரபாகும். சட்டமன்றம் நடந்து கொண்டு இருக்கும் போது, உறுப்பினர்கள் சுதந்திரமாக நடமாட முடி யாமல், ஒரு இடத்தில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று அவையிலே, அவை உறுப்பினர் ஒருவர் தங்களிடத்திலே முறை யிடும் போது, அதைப் பற்றி, அவர்கள் எங்கிருக்கிறார்கள், யாரால் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள், எதற்காக அடைக்கப் பட்டு இருக்கிறார்கள், அவர்கள் இந்தச் சபைக்கு வர யார் தடை விதித்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் நீங்கள் கண்டு அறிந்து, எந்தெந்தத் துறையை நீங்கள் உதவிகரமாகக் கோர வேண்டுமோ, அதை முதலமைச்சரிடத்திலே கோரி, அதனுடைய விவரங்களை எல்லாம் இந்த அவைக்கு அளிக்க வேண்டியது தங்களுடைய கடமை. குறிப்பாக சபை நடந்து கொண்டு இருக்கும் போது, சபை உறுப்பினர்கள் மீது இப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாடு, அல்லது ஒரு தடை அல்லது ஒரு ஆக்கிரமிப்பு அவர்கள் மீது நடத்தப்பட்டு இருப்பது மிகவும், மிகவும் நம்மு டைய கவலைக்குரிய ஒன்றாகும். எனவே இதை நான் உரிமைப்

பிரச்சினையாக எழுப்புகிறேன். தலைவர் அவர்களே, தாங்கள் தான் இது குறித்து முடிவு சொல்ல வேண்டும். அந்த உறுப்பினர்கள் சபை முன் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, இரண்டு மாறுபட்ட கருத்துக்களை உடையவர்கள் இங்கே ஒருவருக்கொருவர் சொன்ன செய்திகளை வைத்துக்கொண்டு, நாம் அவையிலே அதை ஒரு பிரச்சினையாக தொடர்ந்து எழுப்புகிறபோது, ஒருவர் சொல்கிறார், 'எங்களை முன்னாலே இருந்த இடத்திலே அமர வைத்து இருந்தால், எங்களுக்குப் பிரச்சினை இல்லை என்று சொல்கிறார்கள். நீங்கள் உடனே அதற்கு, இன்னின்ன காரணத்தாலே நான் அமர வைக்கவில்லை என்று சொல்கிறீர்கள். ஒருவர் சொல்கிறார், 'ஏற்கனவே இப்படி ஒரு சம்பவம் நடந்த போது, நெகமம் கந்தசாமி, தாமரைக்கனி போன்றவர்களை வேறு இடத்திலே உட்கார வைத்தார்களே, என்று சொல்கிறார்கள். இரண்டு பேர்கள் மாறுபட்ட கருத்துக்களைச் சொல்கிற போது, ஒரு தீர்ப்பை அளித்து, நீங்கள் இதற்கு ஒரு முடிவைக் கண்டு இருக்கிறீர்கள். அதற்குப் பிறகு, அதையே நாம் எடுத்துக் கொண்டு இங்கே பேசுவதிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி போன்றவர்கள் சொல்வதைப் போல, இங்கே அதற்கும் மேலே இதை விவாதிக்க வேண்டுமா என்பதையும், அதைக் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமா என்பதையும் நான் உங்கள் பார்வைக்கு வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை எடுத்துக் கொள்ளப்படவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் சொல்வது எனக்குத் தெரியும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களும், திரு. குமரி அனந்தன் அவர்களும் மற்றவர்களும் சொன்ன செய்திகளை கவனத்தில் கொண்டு, உறுப்பினர்கள் தடுக்கப்பட்டு இருக்கிறார்களா, வேறு ஏதேனும் சிக்கல்களுக்கு ஆளாகி இருக்கிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டியது, அப்படி ஒரு சூழ்நிலை நேர்ந்தால், பேரவைத் தலைவருடைய பொறுப்பு தான் அது. ஆனால் உறுப்பினர்கள் இந்த அவைக்கு வந்திருக்கிறார்களா என்று கவனிக்க, வருகைப் பதிவேட்டைக் கவனித்துவிட்டு, நான் கவனிக்க வேண்டும். ஏன் என்றால் வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டுவிட்டுப் போய் இருந்திருக்கலாம். எனவே அவற்றை எல்லாம் கவனித்துத் தக்கவாறு முடிவு செய்து பின்னர் அறிவிக்கப்படும்.

(ஊ) குவைத் நாட்டிலுள்ள தமிழர்கள் தாயகம் திரும்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலமாக வளைகுடா நாடுகளிலே குறிப்பாக, குவைத்—ஈராக் தகராறு ஏற்பட்ட உடன் ஏறத்தாழ